LIBRARY, ... LEGISLATURE
19 MAY 1964
MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 22nd January 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) : in the chair.

I. QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS

செகண்டரி படிப்பிற்கான காலம்.

*61 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது மாநில அரசாங்கத்தில் கல்விக் கொள்கைப்படி செகண்டரி கல்வியை முடிக்க 11 ஆண்டுகள் ஆவதாலும் மற்ற மாநிலங்களில் 10 ஆண்டுகள் போதுமானதாக உள்ளதாலும் நமது மாநில மாணவர்களுக்கு மேல்படிப்பு அல்லது உத்தியோகத்தில் சேர வயது எல்லைக்குப் பாதகம் ஏற்படுவதைப் போக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேசிய பாணியில் கல்வித் திட்டம் எதுவும் இன்னும் உருவாகவில்லை. இப்போது பற்பல மாநிலங்களில் கல்வித் திட்டம் பற்பல பாணிகளில் உள்ளது. முதல் பட்டப் படிப்புக்காகக் குறைந்தபட்சம் 15 ஆண்டுப் படிப்பு அவசியம் எனக் கருதப்படுகிறது. இதற்கு இந்த மாநிலத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

A national pattern of education has not yet been evolved. At present different States have different patterns of education. A minimum of 15 years of study for the first degree is considered necessary and this has been provided in this State.

திரு. து. ப. அழகமுத்து : நம் மாநிலத்தில் படிக்கும் மாணவர்கள் செகண்டரி கல்வி மட்டும் முடிப்பதாக இருந்தால் மற்ற மாநிலங்களைவிட அதிக ஆண்டுகள் செலவழிக்கவேண்டியிருக்கிறது. அதில் ஏதாவது மாற்றம் செய்ய உத்தேசமுண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மற்ற மாநிலங்களில் எவ்வளவு வருடங்கள் படிக்க வேண்டுமென்பதை மட்டும் வைத்துக்கொண்டு நாம் முடிவு செய்வதற்கில்லை. நாம் நன்கு ஆராய்ந்து கல்வி நிபுணர்களையும் மற்றவர்களையும் கலந்து ஆலோசித்து கீழ் வகுப்பிலிருந்து செகண்டரி படிப்பு முடிகிற வரையில் 11 ஆண்டுகள் படிக்க வேண்டுமென்று இப்போது முடிவு செய்திருக்கிறோம். இது அவசியமானது. மற்ற மாநிலங்களும் அநேகமாக இந்தப் பாணிக்கு வந்துவிடுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

புலவர் கா. கோவிந்தன் : இந்தியா பூராவும் ஒரே சீரான கல்வி பரவ வேண்டும் என்பது மத்திய அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறபோது நம் மாநிலத்தில் மட்டும் மாணவர்கள் பள்ளி இறுதித் தேர்வை ஒரு ஆண்டு கழித்து முடிக்கவேண்டியிருப்ப

19 MAY 1964

[22nd January 1964

தால் உத்தியோகத்திற்குச் செல்லும்போது அவர்கள் பாதிக்கப் பட மாட்டார்களா? இதற்கு உடனடியாக ஏதாவது வழிவகை செய்யப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தியா பூராவிலும் ஒரே மாதிரியாக படிக்கவேண்டுமென்று யாரும் சொல்லவில்லை. கூடியவரை ஒரேமாதிரியாக இருக்கவேண்டுமென்பதுதான் அபிப்பிராயம். இப்போது நாம் அமைத்திருக்கிற அமைப்பு சிறந்த அமைப்பு என்று வேறு மாநிலங்களில் கருதப்பட்டு வருகிறது. போதிய படிப்பு பெறவேண்டும். உத்தியோகம் பெரிதல்ல. அதற்குத் தகுதி வேண்டும். இது குறைந்தபட்ச படிப்பு என்று கருதப்படுகிறது. இதனால் ஒரு வயது கூடுதலாகி விடும் என்று எண்ணுவது சரியல்ல. மேல் நாடுகளில் பல்கலைக் கழகத்திற்கு போவதற்கு முன்பு இன்னும் அதிக வயது ஆக வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்துகிறார்கள்.

திரு. செ. மாதவன்: இந்தியா முழுமையும் ஒரேமாதிரி கல்வித் திட்டம் இருக்கவேண்டுமென்று மத்திய அரசாங்க கல்வி அமைச்சர் நம் அரசாங்கத்திற்கு ஏதாவது யோசனை தெரிவித் தார்களா? அதை நம் அரசாங்கம் ஏற்றுக் கொள்ண்டுள்ளதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் முன்பு கூறியது தவிர வேறு சொல்வதற்கு இல்லை. ஒரேமாதிரி என்று "ஸ்ட்ரெஸ்" செய்யவேண்டியதில்லை. கூடிய வரையில் ஒரு வகையான கல்வித் திட்டம் வேண்டுமென்று, அது எல்லோருக்கும் நன்மை தர வேண்டுமென்பதுதான் அவர்கள் திட்டம். அதைத்தான் அவர் கள் சொல்லுகிறார்கள். கூடியவரை ஒரேமாதிரியாக இருப்பதற் குத்தான் முயற்சிக்கவேண்டுமேதவிர ஒவ்வொன்றிலும் ஒரே மாதிரி இருக்கவேண்டுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. அது சிறந்த கல்வித் திட்டமாகாது.

திரு. ஜே. மாதா கவுடர்: நம் மாநிலத்தில் 11 வருடங்கள் என்று வைத்து மற்ற மாநிலங்களில் பத்து வருடங்கள் என்று இருந்தால் அங்குள்ள மாணவர்கள் பத்து வருடங்கள் படித்து விட்டு நம் கல்லூரிகளுக்கு வந்தால் அவர்களுக்கு இடம் கொடுக்க அனுமதிக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இது அந்தந்த பல்கலைக்கழகம் யோசித்து, பரிசிலனை செய்து முடிவு செய்யவேண்டிய விஷயம். கல்வி இலாகாவும் முடிவு செய்ய வேண்டிய விஷயம்.

திரு. து. ப. அழகமுத்து: மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் பத்து ஆண்டுகள் என்று வைத்து இங்கு 11 ஆண்டுகள் என்று வைக்கும்போது மத்திய அரசாங்க உத்தியோகத்தில் சேரும் போது அது நம் மாநில மாணவர்களுக்கு பாதகமாக அமையாதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஒருவித பாதகமும் நம் மாநில மாணவர்களுக்கு ஏற்படாது.

புலவர் கா. கோவிந்தன்: கல்வித் தரம் உயரவேண்டுமென்பது மிகவும் ஒத்த கருத்துத்தான். கல்லூரியில் சேருவதற்கு முன்பு இன்னும் ஒரு ஆண்டு கூட்டினால் தேவலை என்ற கருத்தையும்

22nd January 1964]

ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆனல் மத்திய அரசாங்க உத்தியோகத்திற்கு போகிறபோது நம் மாணவர்கள் ஒரு ஆண்டு பின் தங்கவேண்டிய நிலை ஏற்படுகிறது என்பதை உணர்ந்து அதற்கு இந்த அரசாங்கம் என்ன செய்யப் போகிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நம் மாநிலம் பொறுத்தவரை முதலில் பள்ளியில் 5 வயதில் சேருகிறுர்கள். பதினைன்று ஆண்டு கள் என்று சொல்லும்போது 16 வயதுதான் பூர்த்தி ஆகிறது. அதற்கு முன்பே உத்தியோகத்தை எதிர்பார்த்தால் அது சரி அல்ல.

திரு. செ. மாதவன்: இந்தியா முழுமையிலும் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் இந்தியை கட்டாய பாடமாக்க வேண்டுமென்று மத்திய கல்வி அமைச்சர் நம் அரசாங்கத்திற்கு யோசனை கூறி யிருக்கிருர்களா? அதுபற்றி நம் அரசாங்கத்தின் கருத்து என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த அரசாங்கத்திற்கு இப் போது ஒன்றும் யோசனை வரவில்லை. பின்னல் கவர்னர் உரை மீதுள்ள விவாதத்திற்கு பதில் அளிக்கும்போது இதுபற்றி மேலும் குறிப்பிடுகிறேன்.

காந்தி கிராமத்திற்கு இந்தியப் பிரதமர் வருகை.

***62 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இந்தியப் பிரதமர் உயர்திரு ஜவஹர்லால் நேரு அவர்கள் 1963 டிசம்பர் மாதம் காந்தி கிராமத்திற்கு வந்ததையொட்டி மாநில அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The information asked for is not readily available. The time and labour involved in gathering the details for answering the question will not be commensurate with the public interest sought to be served.

திரு. செ. மாதவன்: பண்டித நேரு அவர்களின் உடல்நிலை பற்றி பலவித வதந்திகள் நாட்டில் உலாவிவருவதால் அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் அதுபற்றி இங்கு ஒரு அறிக்கை வைக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நேற்றுகூட நம் பிரதம மந்திரி அவர்களின் புதல்வியிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அவர்கள் சுகமாக இருக்கிருர்கள், நல்ல அபிவிருத்தி ஏற்பட் டிருக்கிறது என்று வந்திருக்கிறது. அதை மகிழ்ச்சியுடன் நான் இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்டை மாநிலங்களுக்கு அரிசி விற்பனை.

***63 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) அரிசி விற்பனைக்காக மார்க்கெட் தேடும் பொருட்டு அண்டை மாநிலங்களுக்கு அரசாங்கம் அதிகாரியொருவரை அனுப்பியது உண்மையா?